ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீ கூர நாராயண ஜீயர் ஸ்வாமி

திருவாய் மலர்ந்தருளிய

ஸுதர்சநசதகம்.

பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

பதவுரை விசேஷவுரையுடன்,

மதுரை:

ஹரிஸமயதிவாகர அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

1926,

இதன் விலை 0—12—0] [போஸ்டேஜ் தனி.




பெருமாள் கோயில், பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்.

(ஸ்தோத்ர, திவ்யப்ரபந்த-வ்யாக்ய்யாதா.)

Kumaran Press, Conjeeveram.

ஸ்ரீ:



“ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத”

முன்னுரை.

திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீரங்க நாராயணஜீயர்ஸ்வாமி மடத்தில் அதிபதிகளாக எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுள் ஒருவரான ஸ்ரீகூரநாராயணஜீயர்ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளிய ஸுதர்ஶந ஶதகமென்னும் இந்த ஸ்தோத்ரம் ஶப்தஸந்தர்ப்ப மாதுர்யத்தாலும் அர்த்தவைஶத்யத்தாலும் ஒப்புயர்வற்றதென்னுமிடம் ப்ரஸித்தமேயாம். ஆரோக்யம், ஐஶ்வர்யம், ஆயுஸ்ஸு முதலிய பலன்களை விரும்புமவர்கள் ஸங்கல்பபூர்வகமாக இந்த ஸ்தோத்ர பாராயணம் செய்து இஷ்டப்ராப்திகளையும் அநிஷ்டநிவ்ருத்திகளையும் எளிதில் பெறுகிறார்களென்பதும் ஸர்வப்ரஸித்தம். அநந்யப்ரயோஜநர்களான முமுக்ஷுக்களுக்கும் இந்த ஸ்தோத்ரம் நித்யாநுஸந்தேயமென்பதில் விப்ரதிபத்தி இல்லை.

ஆகவே, ஸர்வஜீவநமும் ஸர்வோபஜீவநமுமான இந்த ஸ்தோத்ரத்திற்குப் பொருள் தெரிந்துகொள்ளவேண்டியது அனைவர்க்கும் ஆவஶ்யகம். இதற்கு அதிஸங்க்ஷிப்தமான ஸம்ஸ்க்ருத வ்யாக்யானம் ஒன்றிருந்தாலும் ஸர்வஸாதாரணமான நடையில் தமிழுரையொன்று இருக்கவேண்டியது ஆவஶ்யகமேயாம். இங்ஙனே ஓருரை எழுதும்படியாகப் பலபெரியோர்கள் * பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி நியமித்தருளினமையால் அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட அடியேன் அஜ்ஞர்க்கும் ப்ராஜ்ஞர்க்கும் வாசியற உபகாரகமாம்படி உரையெழுதத் தொடங்குகின்றேன். நியமேந ப்ரதிபதார்த்தமும், ப்ராயேண தாத்பர்யமும், க்வசித் விஶேஷார்த்தமும், இன்

றியமையாத இடங்களில் பதங்களின் வ்யுத்பத்திவிவரணமும், தேவையான புராண வரலாறுகளும் இதில் வரையப்படும்.

இரவிலும் விரைவிலும் எழுதுவதனால் நேரும் பிழைகளையும், மானிடரியற்கைக்குரிய அநவதாநாதிகளால் நேரும் பிழைகளையும் மற்றும் அச்சுப் பிழைகளையும் பெரியோர் பொறுத்தருளி, கேவலகுணக்ராஹிகளாக விளங்குவார்களென்று விச்வஸிக்கிறேன். அன்றி, குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவார் பக்கல் க்ருதஜ்ஞனாகவுமிருப்பேன்; அவை திருத்தவும்படும். நிற்க,

இந்த ஸுதர்சநசதக ஸ்தோத்ரத்திற்கு கர்த்தாவான ஸ்ரீ கூரநாராயண ஜீயர் ஸ்வாமி எக்காலத்தவர்? எவ்வாசிரியருடைய திருவடிஸம்பந்தி? இன்னும் என்னென்ன க்ரந்தங்கருளிச் செய்துள்ளார்? இத்யாதி விஷயங்களைப் பலர் விமர்சிக்கப் புகுந்து அவரவர் மனம்போனபடி பேசிப்போருவர். ப்ராமாணிகர்களான பெரியோர்பக்கல் கேட்டுணர்ந்ததை அடியேன் இங்கு ஸங்க்ரஹித்தெழுதுகின்றேன்;—இவர் கூரத்தாழ்வானுடைய காலத்திலே எழுந்தருளியிருந்தவரும், ஸாக்ஷாத் அவருடைய திருவடிகளிலே ஆச்ரயித்து ஸர்வசாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்தவருமாவர்.

“கோயிலொழுகு” என்னும் க்ரந்தத்தில் “கூரநாராயணஜீயர் வைபவம்” என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள சில பங்க்திகளை இங்கே உதாஹரிப்போம்:—“நஞ்சீயர் தர்சநம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே, விண்ணப்பஞ் செய்வாரிலே ஒருத்தர் பெருமாள் ஸந்நிதிக்கு யோக்யமாகாமலிருக்க, ஆழ்வானுடைய தேவிகள் ஆண்டாள் அவரிடத்தில் க்ருபையாலே ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸந்யஸித்து ஸர்வஜ்ஞராய் ஆசார்யன் குடியே நிரூபகமாகக் ‘கூரநாராயணஜீயர்’ என்று திருநாமத்தையுடையவராய் உஹாராஞ்ஜிகராய்க்கோயில்வாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவரை அழைத்து, ‘உம்முடைய ஜ்ஞாநங்களும் ஒரு கைங்கர்யத்திலே உபயோகிக்கும்’ என்று சொல்லியிருந்தீரே, நீர் இப்போது இந்த விண்ணப்பஞ் செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்ய

ராகும்படி பண்ணும்' என்று நியமிக்க, அந்த கூரநாராயணஜீயரும் ஸுதர்சனசதகத்தைப் பண்ணி, விண்ணப்பஞ்செய்வாரை நோயற்றுப் பெருமாள் ஸேவாகாலத்துக்கு யோக்யராகும்படி பண்ணினார்"—என்று கோயிலொழுகில் எழுதப்பட்டுள்ளது.

ஶ்வேதாஶ்வதரோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இந்த கூரநாராயணஜீயரேயென்றும். தைத்திரீயோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இவரேயென்றும் சிலர் கூறுவதெல்லாம் ப்ராந்திவிலஸிதமேயாம். ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய காலத்துக்குப் பிற்பட்டவராயும் க்ருஹஸ்தாச்ரமவர்த்தியாயுமிருந்த ஸ்ரீவத்ஸாங்க ஸ்ரீநாராயணமுநியென்பவரால் செய்தருளப்பட்டது ஶ்வேதாஶ்வதரபாஷ்யம். அந்த பாஷ்யத்தின் அவஸாநத்திலே "வேதாந்தகுருபாதாப்ஜ ப்ராப்தநிர்மலவேதஸா । வாதிவேதாந்தநாராயண: ஸ்ரீவத்ஸாங்கேந தர்சித:" என்று அவர் தம்மாலே எழுதப்பட்டுள்ள ச்லோகமும் நோக்கத்தக்கது.

இனி தைத்திரீயோபநிஷத்பாஷ்யம் அருளிச்செய்தவரும் ஸுதர்சனசதக கர்த்தாவும் அபிந்நவ்யக்தியோவென்னில்; அன்று. ஸுதர்சனசதக கர்த்தா கூரநாராயணஜீயர்க்குப்பின் த்ருதீய பட்டஸ்தராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் எழுந்தருளியிருந்தவரும், நலந்திகழ் நாராயணஜீயர் என்றும் ஸ்ரீரங்கராஜஜீயர் என்றும் மறுதிருநாமங்களையுடையவருமான ஸ்வாமியே தைத்திரீயோபநிஷத்பாஷ்யகர்த்தாவாவர். ஆகையாலே, ஸுதர்சனசதககாரரும் ஶ்வேதாஶ்வதரோபநிஷத்பாஷ்யகாரரும் தைத்திரீயோபநிஷத்பாஷ்யகாரரும் பரஸ்பரம் பிந்நபிந்நவ்யக்திகளென்று தெளியக்கடவது.

ப்ரக்ருத கூரநாராயணஜீயர் ஸ்வாமியின் ப்ரபாவம் கோயிலொழுகில் சுருக்கமாகவும், ஸ்ரீரங்கநாராயணஸ்வாமி மடப்ரகாசிகையில் சிறிது விரிவாகவும் காணத்தகும். இவர் அறுபது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

இவர் மந்த்ரசக்திப்ரபாவத்தாலே அழகிய மணவாளனுக்குப்பல கைங்கர்யங்கள் நிர்வஹித்துப் போந்தாரென்றும், இவருடைய காலத்தில் 'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே।

நதத்வஜ்ஞாஸிஷ்யத்தி வ்யாயிதாஶிக்ஷதஸ்வர:" என்ற ப்ரமாணம் ஸ்வஹஸ்தமாகவேயிருந்ததென்றும் ஆசார்யர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஸாந்த்வநஶதகமொன்றே ப்ரஸித்தமாயிராநின்றது. கோயிலில் ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் ஆசார்யவிக்ரஹங்களெழுந்தருளியிருக்கிற இவருடைய திவ்ய மங்களவிக்ரஹத்தின் ஸிம்ஹாஸநத்தில் நான்கு ஜீயர்களை எழுந்தருளப் பண்ணியிருக்கக் காண்கையாலே இவர்க்கு நான்கு ஜீயர்கள் ஆஶ்ரம ஶிஷ்யர்களாக இருந்தனரென்று தெரிகிறது. மற்றும் இவரது விஶேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இந்த ஸாந்த்வநஶதகம் நிகமநஶ்லோகமுட்பட நூற்றொரு ஶ்லோகங்கள் கொண்டது. இதில், இருபத்திறென்காவது ஶ்லோகமளவும் ஜ்ஞாநவர்ணநமும், அதற்குமேல் முப்பத்தெட்டாம்ஶ்லோகமளவும் பக்திவர்ணநமும், அதற்குமேல் ஐம்பதாம் ஶ்லோகமளவும் ஶரவர்ணநமும், அதற்குமேல் அறுபத்தோராம் ஶ்லோகமளவும் நாமவர்ணநமும், அதற்குமேல் எழுபத்திறென்காம் ஶ்லோகமளவும் அக்ஷவர்ணநமும், அதற்குமேல் நூறும்ஶ்லோகமளவும் ஸாராஷவர்ணநமுமாய்ச் செல்லுகிறது.

"துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்" என்றாற்போலே ஸர்வதுஃகநிவர்த்தகமான இந்த ஶாஸ்த்ரம் ஸர்வர்க்கும் ஸதாநுஸந்தேயமாகக் கடவது.

இங்ஙனம்:—

பெருமாள்கோயில், ப்ரதிவாதிபயங்கரம்,

அண்ணங்கரார்ய தாஸன்.

|| ஶ்ரீ: ||

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:||

ஶ்ரீகூரநாராயணமஹாமுநீந்த்ராநுக்ரஹஸித்த

ஶ்ரீஸுதர்ஶந ஶதகஸ்ய வ்யாக்யா ।

ஶ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர-அண்ணங்கராசார்ய விரசிதா||

தனியன்.

ரங்கேஶ விஜ்ஞப்தி கராமயஸ்ய
சகார சக்ரஸ்துதிம் நிவ்ருத்தயே ।
ஸமாஶ்ரயேஹம் வரவர்ஷிணீம் ய:
தம் கூரநாராயண நாமகம் முநிம் ||

பதவுரை.

ய:—	யாவனொரு கூரநாராயண ஜீயர்
ரங்கேஶ விஜ்ஞப்திகர ஆமயஸ்ய நிவ்ருத்தயே	திருவரங்கப்பெருமாளரையருடைய நோய் தீர்வதன்பொருட்டு
வரவர்ஷிணீம்	அபேக்ஷிதங்களை நிறைவேற்றவல்ல
சக்ரஸ்துதிம்	திருவாழியாழ்வான்விஷயமான ஸ்தோத்திரமாகிய ஸ்ரீஸுதர்ஶந ஶதகத்தை
சகார	அருளிச் செய்தாரோ
தம் கூரநாராயண நாமகம் முநிம்	அந்த ஸ்ரீகூரநாராயணஜீயர் ஸ்வாமியை
அஹம் ஸமாஶ்ரயே	அடியேன் பணிகின்றேன்.

கருத்து:—திருவரங்கப் பெருமாளரையர் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டிருக்கையில் அதுகண்டு ஸஹித்திருக்கமாட்டாத ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி அந்த நோய்தீருவதற்காக ஸ்ரீஸுதர்ஶநாழ்வான் விஷயமாக நூறு ஶ்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்தார். இந்த ஸ்தோத்திரமானது ஸர்வாபேக்ஷிதங்களையும் தலைக்கட்டித் தரவல்லது. இப்படிப்பட்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்த அந்த ஜீயர் ஸ்வாமியை அடியேன் தொழுகின்றேனென்கை............

ஸ்ரீ:

ஸுதர்சநசதகத்தின் அடிவரவு.

---

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]


8. [illegible]

9. [illegible]

10. [illegible]

அடிவரவு முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉

ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி

அருளிச்செய்த

ஸௌதர்சநசதகம்.

ஸௌதர்ஶந்யுஜ்ஜிஹானா
திஶி விதிஶி திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்ச்சி꞉
பாஹ்யாபாஹ்யாந்தகார
க்ஷதஜகதகதங்காரபூம்னா ஸ்வதாம்னா ।
தோ꞉ஸஜ்ஜம்ப்ரஸ்தப்ரஜஜ்ஜ
த்விஷ்பாயஸிபாவயஸ்தோக்ஷண ரைகவக்ய
ஜ்வாலா ஜாஜ்வல்யமானா விதரது
பவதாம் வீப்ஸயாऽபீப்ஸிதானி ॥ ௧ ॥

ஸ்ரீ:

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர்
இயற்றிய பதவுரையும் விசேஷவுரையும்.

கூரநாராயணாபிக்யோ முநிரத்ய ஸமாஹித꞉ ।
ஸ்ரீமத்ஸுதர்ஶனஸ்தோத்ரம் விதநோதி ஸதாம் முதே ॥

பதவுரை.

பாஹ்யாபாஹ்யாந்தகாரக்ஷத ஜகதகதங்கார பூம்னா — வெளியிலுள்ளதும் உள்ளுள்ளதுமான இருள்களாலே கெட்டுப்போன உலகங்கட்கு வைத்தியனாகும் பெருமையை யுடைய

ஸ்வயா பா⁴ஸா	தனது ஒளியினால்
ஸாவித்ரம் மஹ:	ஸூர்யனுடையதான ஒளியை
திரஸ்க்ருத்ய	கீழ்ப்படுத்தி
தி³ஶி விதி³ஶி	எல்லாவிடங்களிலும்
உஜ்ஜிஹாநா	வியாபித்து விளங்குவதும்,
தோ:கண்டூ³ த³ர்ப்ப த்³ருப்த விபு³தரிபுவதூ⁴ கண்ட²வைகல்யகல்யா	புஜங்களிலுள்ள தினவினால் மிகவும் கொக்கரிக்கின்ற அசுரர்களின் பெண்டுகளுடைய கழுத்துகளை[த் தாலியற்றதாக] சூன்யமாக்குவதில் வல்லமை பெற்றதும்,
ஜாஜ்வல்யமாநா	ஒப்புயர்வின்றி ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமான
ஸௌதர்ஶநீ ஜ்வாலா	திருவாழியாழ்வானுடையதான ஜ்வாலையானது
ப⁴வதாம் அபி⁴லஷிதாநி	உங்களது விருப்பங்களை
வீப்ஸயா விதரது	அடிக்கடி தந்திடுக.

* * * இது முதல் இருபத்திரண்டு ஶ்லோகமளவும் திருவாழியாழ்வானுடைய ஜ்வாலையைப் பற்றின வர்ணனையாய்ச் செல்லுகிறது. அதில் இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுவது யாதெனில்;

உலகத்தில் இருள் இருவகைப்படும்; அகவிருள் என்றும் புறவிருள் என்றும். அகவிருள் அஜ்ஞாநாந்தகாரமெனப்படும்; புறவிருளென்பது ப்ரஸித்தமானதேயாம். இவ்விரண்டுவகையிருளாலும் தடுமாறுகின்ற உலகத்தவர்கட்கு அவ்விருளைத் தொலைத்தருளி வாழ்விக்கவல்ல வொளியினால் ஸூர்யனுடைய தேஜஸ்ஸைத் திரஸ்கரித்திருக்கும் ஸுதர்சந ஜ்வாலை. (ஸூர்யன் புறவிருளொன்றை மாத்திரமேயன்றோ போக்கவல்லன்.) அசுரர்களுக்கு எப்போதும் யுத்தம் செய்வதிலேயே உத்ஸாஹமாதலால் சண்டைக்கு யார் அகப்படுவார்களென்று அவர்களுடைய புஜங்கள் தினவுகொண்டு அதனால் அவர்கள் மிகவும் கொக்கரிப்பார்கள்; அன்னவர்களைத் தொலைத்து அவர்களது பெண்டிரைக் கைம்பெண்டாட்டிகளாக ஆக்கவல்லதுமான ஸ்ரீஸுதர்சந ஜ்வாலை உங்களுடைய அபீஷ்டங்களைப் பரிபூர்ணமாக்குக என்பதாம்.

ஸாதாமநீப்ரத்யக்ஷயம்—ஸௌதாமநீ இதி தஜ்ஜீவஸ்ய த்ருஷ்டி:. [உஜ்ஜிஹானா] 'ஓஹாங் கதௌ' என்கிற தாதுவானது உத் என்னும் உபஸர்க்கத்தை முற்கொண்டு ப்ராதுர்ப்பாவார்த்தமாயிருக்கிறது. ஸவிது: இதம்—ஸாவித்ரம். [பாஹ்வேத்யாதி] பாஹ்யாபாஹ்யாந்தகாராணாம் க்ஷபயஸ்ய (பாயிதவ்ய) ஜகத: ஸமஸ்தகாரண: ஸூர்ய (தேஜஸ்) யஸ்ய தேந॥ "க்ஷண ஸௌகர்யா க்ஷ்யா" என்ற பாடமும் ஏற்கும்; பொருள் ஒக்கும். க்ஷ்யா—ஸஞ்ஜ்ஞமான என்றுமாம், ஸமர்த்தமான என்றுமாம். வீக்ஷ்யா—வ்யாவ்ருத்திஷ்யா = வ்யாந: வ்யாநிவ்ருத்யம்:.

இந்த ஶ்லோகம் முழுதும் ஸ்ரக்தராவ்ருத்தம்......... (க)

ப்ரத்யுத்யாதம் மயூகைர் நபஸி தினக்ருத: ப்ராப்தஸேவம் ப்ரபாபி:, பூமௌ ஸௌமேரவீபிர் திவி வரிவஸிதம் தீப்திபிர் தைவயாநாம் । பூயாஸ்ஸேவ்ய பூதயே வ: ஸ்தாதா ஸகலதிக்ப்ராந்த ஸாந்த்ர ஸ்புலிங்கம் பாகம் ஜாமதக்ந்யதாபம் த்ரிபுவநவிஜய வ்யக்ர ஷௌர்யம் தேஜஸ்தத் ॥ (உ)

பூமௌ	பூலோகத்தில்
ஸௌமேரவீபி: ப்ரபாபி:	மேரு பர்வதத்தினது காந்திகளினால்
ப்ராப்தஸேவம்	ஸேவிக்கப் பெற்றதும்
நபஸி	ஆகாசத்தில்
தினக்ருத:	ஸூர்யனுடைய
மயூகை:	கிரணங்களினால்
ப்ரத்யுத்யாதம்	எதிர்கொண்டு உபசரிக்கப்பட்ட
திவி	ஸ்வர்க்கலோகத்தில்
தைவயாநாம்	தேவர்களின் மாளிகைகளினுடைய (அல்லது) நக்ஷத்ராதி தேஜ: பதார்த்தங்களினுடைய
தீப்திபி:	ப்ரகாசங்களினால்
வரிவஸிதம்	சிச்ருஷை பண்ணப்பெற்றதும்
ஸகலதிக்ப்ராந்த ஸாந்த்ர ஸ்புலிங்கம்	ஸர்வதிக்குகளிலும் சுழன்றுவியாபித்து நெருங்கின தீப்பொறிகளையுடையதும்

த்ரிபுவந விஜயவ்யக்ரம்	மூவுலகங்களையும் வெல்வதில் முயற்சியுடையதும்
(ப்ரதிபதம்)	
ஜாக்ரத் ப்ரதாபம்	எப்போதும் விளங்காநின்ற தாப சக்தியையுடையதும்
உக்ரம்	(எதிரிகட்கு) பயங்கரமும்
சாக்ரம்	திருவாழியாழ்வானுடையதுமான
தத்	அப்படிப்பட்ட [ப்ரஸித்தமான]
தேஜஃ	தேஜஸ்ஸானது
வஃ	உங்களுக்கு
பூயஸே	மிகவும் அதிகமான
பூதயே	செல்வத்தின்பொருட்டு
ஸ்புரது	விளங்குக.

* * * நான்காம் பாதத்திலுள்ள "த்ரிபுவந விஜய வ்யக்ரம்" என்ற விஶேஷணத்தைப் பூர்வார்த்தமும் விவரிக்கிறது. "பாஶ்சாத்யபூர்வஶேஷீயாத்" என்ற நியாயத்தை யடியொற்றி "ஸுமேரௌ ஶைலேந்த்ரஶ்ரீபிஃ ப்ரபாபிஃ ப்ரத்யுதம்" என்று முதலில் யோஜிக்கப்பட்டது; "ப்ரமிப்யஜயிக்ஷம் தேஜோ ஜிஷ்ணுபிஃ" என்றிறே அடைவு.

பூலோகத்தில் மேருபர்வதத்தின் ஒளிகள் திருவாழியாழ்வானுடைய திவ்ய தேஜஸ்ஸுக்கு அடிமை செய்கின்றன வென்றது—மேருமலையின் நிரம்பிய ஒளிகளிற் காட்டிலும் மேம்பட்டு விளங்குவது ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு என்றபடி. ஆகாசத்தில் இரவியின் கதிர்கள் எதிர்கொள்ளுகின்றனவென்றும், ஸ்வர்லோகத்தில் தேவயாத்ராம் தீப்திகள் சிச்ருஷை செய்கின்றனவென்றும் சொன்னதற்கும் அதுவே கருத்தாம். எனவே மூவுலகங்களிலும் உள்ள தேஜஃஸமுதாயங்களையெல்லாம் வென்று வீறுபெற்று விளங்குவது திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு என்றதாயிற்று.

பின்னடிகளின் கருத்து ஸ்பஷ்டம். ஸுமேரோஃ ஜாதஃ—ஸௌமேரவ்யஃ, தாபிஃ. [தேவயாத்ராம்] 'யாத' என்னும் பதம் ப்ர

ஹத்துக்கும் தேஜஸ்ஸுக்கும் வாசகமாகையாலே இரண்டுவகையான பொருள்களும் இங்கு விவக்ஷேண கொள்ளப்பட்டன. [illegible] (உ)

பூர்ணே பூரை: ஸுதா⁴நாம் ஸுமஹதி லஸதோ ஸோமபி³ம்ப³ஶராவே, பா³ஹாஶாகா²வருத்³த⁴க்ஷிதிக³க³நதி³வ: சக்ரராஜத்³ருமஸ்ய | ஜ்யோதிஸ்ஸௌத³ர்ஶநம் வ: ப்ரகடிதஸௌமநஸம் [illegible] உத்தம்ஸலக்ஷ்மீம், [illegible] ஸததம் ஸோத்கர்ஷம் ப்ரஹர்ஷம் || (ங)

ஸுதா⁴நாம் பூரை:	அம்ருதரஸ ப்ரவாஹங்களாலே
பூர்ணே	நிறைந்ததாயும்
ஸுமஹதி	மிக்க பெருமை பொருந்தியதாயிருக்கிற
ஸோமபி³ம்ப³ ஶராவே	சந்திரபிம்பமாகிற பாத்திரத்தில்
லஸத:	விளங்காநின்றதாய்
பா³ஹாஶாகா²வருத்³த⁴ க்ஷிதி க³க³ந தி³வ:	புஜங்களாகிற கிளைகளினாலே பூமியையும் ஆகாயத்தையும் ஸ்வர்க்கத்தையும் ஆக்கிரமித்ததாயுள்ள
சக்ரராஜத்³ருமஸ்ய	திருவாழியாழ்வானாகிற கல்பவ்ருக்ஷத்தினுடைய—,
ப்ரகடிதஸௌமநஸம்	புஷ்பஸம்ருத்³தியை விளக்குவதாயும்—தேவதைகளின் செல்வத்தை விளங்கச்செய்வதாயும்
[illegible] உத்தம்ஸலக்ஷ்மீம் [illegible]	திங்மண்டலங்களில் ஶிரோபூஷணசோபையைப் பெருக்காநின்றதாயுமுள்ள
ஜ்யோதிஸ்ஸௌத³ர்ஶநம்	ஜ்யோதிஸ்ஸென்னும் தனிரானது
வ:	உங்களுக்கு
ஸோத்கர்ஷம்	மேன்மைபொருந்திய
ப்ரஹர்ஷம்	ஸந்தோஷத்தை
[illegible]	தந்திடுக.

* * * திருவாழியாழ்வானை ஒரு வ்ருக்ஷமாகவும் அவருடைய சோதியை ப்ரவாளமாகவும் ரூபணம் பண்ணிப்பேசுகிறார் இதில். உலகத்தில் வ்ருக்ஷமானது தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்கும்; சுற்றிலும் தழைத்தோங்குகின்ற கிளைகளையுடைத்தாயிருக்கும்; அத்தன்மை திருவாழியாழ்வானுக்கும் பொருந்தினபடி சொல்லுகிறது பூர்வார்த்தத்தில்.—அம்ருதவெள்ளம் நிறைந்த சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதாய்த்து ஸ்ரீஸுதர்சந வ்ருக்ஷம். சக்கரத்தாழ்வான் சந்திரமண்டலத்தில் விளங்குவதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து என்னென்னில்; ஸுதர்சநயந்த்ரஸம்ஸ்தாந க்ரமம் சொல்லுமிடத்து ஸ்ரீஸுதர்சநாழ்வான் சந்திரமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணமாகச் சொல்லப்பட்டிருத்தலால் இங்ஙனே அருளிச் செய்யப்பட்டது. “சந்த்ரபிம்பஸ்ய மத்யஸ்தாதாரம் சக்ராத்மஸம்ஹித:। தஸ்ய மத்யே ஸ்திதம் தேவம் ரக்தவர்ணம் ஸுதர்சநம்”। என்று அஹிர்புத்ந்யஸம்ஹிதையில் இருபத்தாறும் அத்யாயத்தில் (ஶ்லோ-5) சொல்லப்பட்டதிறே. இந்த ஶதகந்தன்னிலும், மேல் ‘ப்ரணவஶஶயநாயாரஷட்கோணவ்ருத்தி’ என்றும் “சந்த்ராய: காஸ்யசந்த்ரவாஸீச” என்றும் “ஶ்வேதஶஶயாரம் ப்ரேக்ஷ்யத்ராநாஷட்கம்” என்றுமருளிச் செய்திருப்பவை இங்கே ஸ்மரிக்கத்தக்கன. உலகத்தில் வ்ருக்ஷம் தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்குவதுபோல் இந்த ஸ்ரீஸுதர்சந வ்ருக்ஷம் ஸுதாப்ரவாஹபூர்ணமான சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதென்றதாயிற்று.

வ்ருக்ஷமானது சுற்றிலும் தழைத்தோங்காநின்ற கிளைகளினால் கீழும் மேலும் இடமடைத்துக்கொண்டு விளங்குவதுபோல் இந்த ஸுதர்சந வ்ருக்ஷம் தனது திருக்கைகளாகிற ஶாகைகளினாலே ஊர்த்வாத்யகிலதிசைகளையெல்லாம் இடமடைத்துக் கிடக்கிறதென்கிறது இரண்டாம் பாதம். நீண்ட கைகளைக் கிளைகளோடு ஒப்பிடுதல் கவி மரபு. “சக்ரராஜத்ருமஸ்ய” என்றவிடத்து த்ருமஶப்தம் ஸாமாந்யமாயிருந்தாலும் இங்கே கல்பவ்ருக்ஷமாகிற விசேஷத்துக்கு வாசகமாகக்கடவது. அன்றியே, த்ருமாணாம் ராஜா— ராஜத்ரும:, சக்ரமேவ ராஜத்ரும: என்று வ்யுத்பத்தி பண்ணுவா

ரும் சிலருளர். வ்ருக்ஷத்தில் செந்தளிர் உண்டாகிறாப்போல் இந்த ஸுதர்ஶந வ்ருக்ஷத்தில் செவ்விய சோதியே ப்ரவாளமென்கிறார். [ப்ரகடிதஸுமநஸ்ஸம்பத்] பல்லவமானது புஷ்பஸம்பத்தை விளக்குமே; அப்படியே இந்த ஸுதர்ஶந ஜ்யோதிஃ ப்ரவாளமும் செய்யா நின்றதென்பதை ஶ்லேஷரீதியாலே சொல்லுகிறார். ஸுமநஶ்ஶப்தம் புஷ்பத்துக்கும் தேவதைகளுக்கும் வாசகம். பல்லவமானது ஸுமநஶ்ஶப்தவாச்யமான புஷ்பத்தின் ஸம்பத்தை ப்ரகடநம் செய்யும்; ஸுதர்ஶந ஜ்யோதிஃப்ரவாளமானது ஸுமநஶ்ஶப்தவாச்யர்களான தேவதைகளின் செல்வத்தை ப்ரகடநம் செய்யா நிற்குமென்க. தேவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை நலிகின்ற அஸுரராக்ஷஸர்களை அழிக்கும் முகத்தால் ஸுதர்ஶநஜ்யோதிஸ்ஸானது தேவதாஸம்ருத்திப்ரகடநகாரியாகிறபடி. [ஶூராமோவேஷு உத்தம்ஸமௌக்த்யம் பாஷ்டு.] மாதர்கள் பல்லவத்தை ஶிரோபூஷணமாகக் கொள்ளுவார்கள்; ஸுதர்ஶநஜ்யோதிஸ்ஸும் திக்குகளில் ஶிரோபூஷணமாக விளங்காநின்றதாய்த்து. திருவாழியின் சோதியானது திசைகள்தோறும் அழகிதாகப் பரவியிருக்கின்றதென்றபடி. 'ஶூரா'ஶப்தத்தின் ஸ்வாரஸ்யம் நோக்கத்தக்கது.

இவைகளால் ப்ரவாளமென்னவமைந்த ஸுதர்ஶநஜ்யோதிஸ்ஸானது உங்கட்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தருகவென்றதாயிற்று. ... ... (௩)

ஶூராதாராத்தஹவ்யாத்வராதி விஹதக்ஷபதக்ஷாத்ரக்ஷாதம், நாஹேஹ்யாஸ்வஸ்தநாஹேநிஜவிஹவபரித்ராணஹேதோஶ்ஶ்ரேஷேநேதோ: க்ரூராயோகேக்ஷணோத்ஸ்தம்பிதஹிமகிரணோ ஹாரீ ஶாயீயஸ்ய ஹேதே: தத்வோ திக்சக்ரவாளம் சகலயது சராசர: பாஷ்யதாதம் ப்ரமோதாய பூயாத் ‖ (௪)

ஶாயீயஸ்ய	எம்பெருமானுடையதான
ஹேதே:	திருவாழியினுடைய
யந்மஹ:	யாதொரு தேஜஸ்ஸானது

ஸஹஸ்ராரஜ்வாலா: — ஆயிரக்கணக்கான அரஸமூஹத்தினின்றும்,

விஹதவிபக்ஷபக்ஷா: — எதிரிகளைத்தொலைப்பதில் ஸமர்த்தமான

அக்ஷாத் — அக்ஷத்தில் நின்றும்

ஸாவித்ரஸநாபே: — ஸூர்யனோடு ஒத்த

நாபே: — நாபியில் நின்றும்

நிஜவிபவவிமிதவிச்வம்பராயா: — தனது பெருமையினாலே அளவிடப்பட்ட பூமியையுடைத்தான

நேமே: — நேமியில் நின்றும்

ஜ்வாலா: விஸரதி — எங்கும் பரவுகின்றதோ,

ஸகலநிகமை: ச்லோகமயை: — ஒருமிடறான வேதங்களாலே

ஸ்துதமஹிம — துதிக்கப்பட்ட பெருமையையு [டையதும்

சதஸ்ருஷு திக்ஷு — நான்கு திசைகளிலும்

ஸஞ்சரந்தம் — பரவுகின்றதுமான

தத் (தேஜ:) — அந்த ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு

வ: — உங்களுக்கு

சதுர: புருஷார்தாந் — (அறம் பொருள் இன்பம் வீடென்னும்) நான்கு புருஷார்த்தங்க [ளேயும்

புஷ்யாத் — பெருக்கத் தந்திடுக.

* * * அரம், அக்ஷம், நாபி, நேமி—என்னுமிவை திருவாழியாழ்வானுடைய அவயவங்கள். அந்த அவயவங்கள் தோறும் கிளர்கின்ற ஜ்வாலையே ஸுதர்சந ஜ்வாலையாம். (அவயவஸமுதாயமே யிறே அவயவியாகிறது.) அதனுடைய புகழ் ஸகலவேதங்களிலும் பொலியும். அத்தகைய ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் உங்களுக்கு அளித்திடுக வென்கிறார்.

“ஜ்வாலாதாரா:” என்ற இரண்டனுள் ஒன்று பஹுவ்ரீஹி; ஒன்று அவ்யயம். அராணாம் ஸஹஸ்ரம்—ஸஹஸ்ரம்; தஸ்யா: என்று பஹுவ்ரீஹிக்கு வ்யுத்பத்தியாம். அதோ பஹுவசநம். “சதம், ஸஹஸ்ரம்” இத்யாதிஷு ஸங்க்யாவாசக பதங்களை விசே

ஷணமாகவுடைய விசேஷ்ய பதங்கள் பஹுவசநாந்தமாக இருக்கவேணும்; "சதம் பாத்ரா:, ஸஹஸ்ரம் பசவ:" இத்யாதி உதாஹரணம். இவ்விடத்தில் ஸஹஸ்ராத் சரேப்ய: என்றிருக்கவேணுமேயன்றி 'சராத்' என்று ஏகவசநாந்தமாயிருத்தல் பொருந்துமோ வென்று விசிகித்ஸை உண்டாகக்கூடியதே;

இதற்கு ஸமாதாநப்ரகாரங்கள் பலவுண்டு:—ஸஹஸ்ர சப்தமானது சரஸமூஹத்தில் ஸாக்ஷாத்தாக அந்வயிப்பதல்ல; ஸமூஹாவயவமான அரங்களில் அந்வயிக்கும்; ஸமூஹம் ஒன்றே யாகையாலே "சராத்" என்ற ஏகவசநப்ரயோகம் கூடும் என்பர் சிலர். இங்ஙனன்றியே, ஸஹஸ்ரசப்தம் ஸஹஸ்ராவயவபரமாய் அதன்மேல் 'அர்சஆத்யச்' என்றுகொண்டால் 'ஸஹஸ்ராவயவவிசிஷ்டாத் சரஸமூஹாத்' என்றதாகிறது என்பர் சிலர்; இங்ஙனுமன்றிக்கே, நடாதூர் அம்மாளருளிச்செய்த பரத்வநிர்ணயச்லோகத்தில் "ஸ்ரீரங்கத்ருஷ்டமங்கடாத்ரி சிகியாதவ சைதந்யேஷாத்ரே த்யாநே ஸ்தாநிகேதநேஷு ஸதா ஸந்நித்யாவேசதேஷு" என்ற ச்லோகத்தில் "கவேஷாத்ரே சைலே த்யாநேஷு" என்றுமே "த்யாநே" என்று ஏகவசநப்ரயோகம் காண்கையாலே அப்படியே இங்கும் கூடும் என்பர் சிலர். இங்ஙனே நிர்வஹிக்கும் புடைகள் பலகிடந்தாலும் ஹ்ருதயங்கமமான நிர்வாஹம் ஒன்றுண்டு; அதாவது—சராணாம் ஸமூஹ: சராத் என்று வ்யுத்பத்தி பண்ணுமல் 'சராணாம் ஸம்பத்தி: சராத்' என்று கொண்டு சரபதத்தை விசேஷணமாகவும் ஸஹஸ்ரபதத்தை விசேஷ்யமாகவுங்கொண்டு "அரங்களினுடையதான ஆயிரத்தில் நின்றும்" என்று பொருள் கொள்ளுதல் மிக்கபொருத்தமுடையது. அரங்களினுடைய ஆயிரம் என்றால், ஆயிரம் அரங்கள் என்றே பொருள்படும்: "ஸஹஸ்ராம் காயாநாம் சதேஷ்வந ஸம்ரிஷ்டத்நாஸ்" "வஸ்த்ராநாம் சதைதநாஸ்" இத்யாதிஸ்தலங்களில், ஸஹஸ்ரம் காயா:, சதம் வஸ்த்ராணி—என்று பொருள்படுமாறுகாண்க.

இந்த சதகந்தன்னிலே "ஹம்ஸாநம் ஹம்ஸயஸம் வொ ஷிச தா ஆசசதி ஹாஸ்பராணாசிராணாத்" என்ற ப்ரயோகமும்

இங்கே க்ருஷ்டாங்கமாகப் பொருந்தும்; 'சராணாம் கமஸாத்'= ஸஹஸ்ரம் சராணி என்றபடியிறே.

இனி இவ்வழிகளைத்தவிர வேறுவழியுமுண்டாகில் அறிவிற் சிறந்தோர் அங்ஙனே உபபத்தி சொல்லிக்கொள்க.

'ஆராத்' என்ற சப்தம் "ஆராத்தூரஸமீபயோ:" என்ற அமரகோசத்தின்படி சேய்மை அண்மை என்னுமிருவகைப்பொருள்படும். நெடுந்தூரம் வரையில் என்று இங்கே பொருளாகக்கடவது. ஸமீபத்திலும் தூரத்திலும் என்றுமாம். "நிஜவிபவபரிஸ்பந்தஸந்தை:" என்ற நைஜவிசேஷணம்—ஸ்ரீவைகுண்டநைஜியானது பூமியிற்காட்டிலும் மிக்க விஸ்தாரமுடையதென்னுமிடத்தைத் தெரிவிக்கும். "ஆராதேய ரக்ஷணவ்யஸ்தஹேதி:" என்றும் பாடமுண்டாம். ... ... (௪)

ஶ்யாமம் தாமைகஸம்ஸ்த்யா க்வசந பகவத: க்வாபி பப்ரு ப்ரக்ருத்யா, ஶுப்ரம் ஶேஷஸ்ய தாம்நா க்வசந ஶோணிம்நா க்வாபி தத்வைவ ரக்தம் | நீலம் ஶ்ரீநேத்ரகாந்த்யா க்வசிதபி தயாந வ்யாப்தஸ்தைவ ஸித்ரம், த்யாத்ரூணாம் விதாநஶ்ரியமத விநிர்தாஸ்தே ஸமஸ்தா: || (௫)

க்வசந	ஓரிடத்தில்
பகவத:	எம்பெருமானுடைய
தாமைகஸம்ஸ்த்யா	திருமேனி நிறத்தின் வ்யாப்தியி
ஶ்யாமம்	பசுமைநிறத்ததாயும் [லே
க்வாபி	ஓரிடத்தில்
ப்ரக்ருத்யா பப்ரு	இயற்கையாகவே பிங்கள வர்ண
க்வசந	மற்றோரிடத்தில் [மாயும்
ஶேஷஸ்ய தாம்நா	திருவனந்தாழ்வானுடைய ஒளியி
ஶுப்ரம்	வெண்ணிறமாயும் [லே
க்வாபி	மற்றுமோரிடத்தில்

தஸ்யைவ	அந்தத் திருவனந்தாழ்வானுடை
மணிராகாத்	மாணிக்கவொளியினாலே [யுமே
ரக்தம்	சிவந்ததாயும்
க்வசித்	இன்னுமோரிடத்தில்
ஶ்ரீநேத்ரகாந்த்யா நீலம்	பிராட்டியினது திருக்கண்களின் காந்தியினாலே நீலநிறத்ததாயும்
	(இப்படி நாநாவர்ணங்கள் விரவப்பெற்றமையாலே)
ஶுசிஸத்வ ஸம்பந்தஸத்வ	குசிதம்பதிகளான பெரியபிராட்டியார்க்கும் பெரியபெருமாளுக்கும்
விசித்ரம் விதாநஶ்ரியம்	விசித்திரமான மேற்கட்டியின் ஶோபையை
ஸ்புடம் ததாநிவ ஸ்திதம்	விசேஷமாக உண்டுபண்ணி நின்றதுபோன்றுள்ள
ரதாங்கதாம	திருவாழியாழ்வானுடைய தேஜ
வ:	உங்களுக்கு [ஸ்ஸானது
ஶம் உபசிநோதாத்	ஸௌக்யத்தை வளரச்செய்திடுக.

கார்முகில் வண்ணனை எம்பெருமானுடைய திருமேனியொளியின்பரவுதலினால் சிலவிடங்களில் ஶ்யாமவர்ணமாயும், சிலவிடங்களில் இயற்கையாகப் பிங்களவர்ணமாயும், *அரவத்தமளியின் ஒளியினால் சிலவிடங்களில் ஶுப்ரவர்ணமாயும், அத்திருவனந்தாழ்வானுடைய திருமுடியில் விளங்குகின்ற மாணிக்கத்தின் ஒளியினால் சிலவிடங்களில் ரக்தவர்ணமாயும், குவளையங்கண்ணியான பிராட்டியின் திருக்கண்ணொளியினால் சில விடங்களில் நீலவர்ணமாயும் இப்படி பலவகை வர்ணங்கள் விரவப்பெற்றிராநின்ற ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது பெருமாளும் பிராட்டியுமாகிற திவ்யதம்பதிகளுக்கு விசித்ரவர்ணமான மேற்கட்டி கட்டினதுபோல் விளங்காநின்றதென்று ஒரு உத்ப்ரேக்ஷாலங்காரந்தோற்றப் பேசிற்றாய்த்து. இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைக்கு ஆஸ்பதமான சோதியானது உங்கட்கு ஸுகத்தைத்தந்திடுக.

இதில், 'ஶ்யாமம்' என்றும் 'நீலம்' என்றும் இரண்டு பதங்கள் உள்ளன; "க்ருஷ்ணநீலாஸிதஶ்யாம காலஶ்யாமலமேசகா:" என்ற

அமரகோஶத்தின்படி இரண்டையும் பர்யாயபதமாகக் கருதுமவர்கள் பௌநருக்த்யம் ஶங்கிப்பார்கள். அங்ஙன் ஶங்கிக்கவேண்டா; அந்த அமரகோஶந்தன்னிலே நாநார்த்தவர்க்கத்தில் "த்ரிஷு ஶுப்ரே ஹரித்ருஷௌ" என்றிருப்பது அறியத்தக்கது.* பாசியின் பசும்புறம் போலு நீர்மை இங்கே ஶ்யாமபதத்தால் விவக்ஷிதமென்க. [பத்ம] பதஶிவாதத்வவர்ணத்தை பத்மவர்ணமென்பார்கள். ஸா ஶீதநஜ்யோதிஸ்ஸின் இயற்கையான நிறம் இதுவாம். [ஶேஷஸ்ய] "சென்றால் குடையாம்" இத்யாதிப்படியே ஸர்வாவஸ்த்தைகளிலும் அவிநாபூதனை திருவனந்தாழ்வானுடைய வெண்மை. தாஸ்ய த்வஸ்வரூபமிறே அவனது. — ... (௫)

ஶம்ஸந்த்யுந்மேஷமுத்யோதிதபரமஹஸோ பாஸ்வத: கைடபாரே:, ஜைத்ரீ ஸந்த்யேவ நக்தஞ்சரவிஜயகரீ யா ஜகத்வந்தநீயா। பத்நாத்யக்ஷ்ணாயபத்நாத்யுவிபடிதபதந்யுத்பவி நீஹாரா, ரதாங்கஶ்ரீ ரஶ்மிஶ்ரீ: பூர்ணாதபா பவதாம் ப்ரத்யூஹாந்தாநதேந: ॥ ௬

ரதாங்கஶ்ரீ	திருவாழியாழ்வானுடைய தான
யா ரஶ்மிஶ்ரீ	யாதொரு ஜ்வாலாவைபவமானது
உத்யோதிதபரமஹஸ: பாஸ்வத:	சந்திரன் முதலிய மற்ற க்ரஹங்களினுடைய தேஜஸ்ஸைக்கபளீகரித்திருக்கின்ற ஸூர்யனுடைய
உந்மேஷம் ஶம்ஸந்தீ	உதயத்தைத்தெரிவிக்கின்ற
ஸந்த்யேவ	ஸந்த்யையைப்போல
உத்யோதிதபரமஹஸ: கைடபாரே:	இதர பதார்த்தங்களெல்லாவற்றினுடையவும் தேஜஸ்ஸை இல்லை செய்திருக்கிற எம்பெருமானுடைய
உந்மேஷம்	ஶௌர்யாதிஶயத்தை
ஶம்ஸந்தீ	விளங்கச் செய்யாநின்றதாய்,
நக்தஞ்சரவிஜயகரீ	இரவில் திரிகின்ற துஷ்ட ஜந்துக்களுடையவும் (2) ராக்ஷஸர்களுடையவும் நாஶத்தைச் செய்யாநின்றதாய்

ஜகத்வந்த்யா	எல்லாவுலகத்தாலும் உபாஸிக்கத் தக்கதாய்
பந்தூகாப ப்ரஸூந ஸ்தபக ... ஸம்ருத்தி ... ஸமேதா	கோங்குமலர்களின் காந்தியோடொத்த காந்தியோடு சேர்ந்ததே வர்ணங்களினால் பெருக்கமுற்ற விளங்குகின்றதோ [தாய்
ஜ்வாலா	அந்த ஸௌதர்சந ஜ்வாலையானது
ஸா	உங்களுடைய
வ:	
ப்ரத்யஹோத்பந்நம் ஏந:	நாள்தோறுமுண்டாகும் பாபத்தை
ப்ரணுததாம்	போக்கடிக்கவேணும்.

திருவாழியாழ்வானுடைய ஜ்வாலாவைபவத்தை ப்ராதஸ்ஸந்த்யையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ச்லேஷஸ்ரீயாலே. ஸந்த்யையானது [உத்வாஸித ஸமஸ்தஸௌர தேஜ: உதித்த ஸம்ஸ்ரீ —] ஸகல தேஜஸ் பதார்த்தங்களினுடைய ஒளியை யெல்லாம் உள்ளடக்க வல்ல ஸூர்யனுடைய உதயத்தைத் தெரிவிக்குமாபோலே ஸௌதர்சநஜ்வாலையானது [உத்வாஸிதஸமஸ்தஸ: தைத்யாதி ப்ரத்யுதிதேஜ: —] ப்ரதிபக்ஷிகளின் தேஜஸ்ஸையெல்லாம் க்ஷயீகரிக்கவல்ல ஸ்ரீரங்கநாதனுடைய உத்கர்ஷமுண்டு — ஸூசிதமான ஸம்பத்தும்; அதனை விளக்கா நிற்கும். [நக்தஞ்சரவிஜய ஸ்ரீ] இரவில் திரியும் க்ரூர ஜந்துக்களெல்லாம் ப்ராதஸ்ஸந்த்யை வந்தவாறே உள்ளடங்கும்; நக்தஞ்சரர்களான ஸர்வராக்ஷஸர்கள் ஸௌதர்சநஜ்வாலையைக் கண்டவாறே நாசமடைவர்கள்.

[ஜகத்வந்த்யா] “ஸந்த்யாமுபாஸதே” என்று உலகெல்லாம் வணங்குமிறே அதை; இங்கும் “வடிவார் சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு” என்றாருண்டே?

[பந்தூகாப்ரேதி.] ப்ராதஸ்ஸந்த்யாகாலத்திலே ஸூர்யனுடைய செவ்விய சோதிகள் எங்கும் பரவுகையாலே தாராதிக ஜ்யோதிர்ராசிகள் தமது கரிய நிறம் மாறிச் செம்மைபெற்று விளங்கும். ஆனபின்பு, பந்தூகவர்ணங்களின்சோதியோடொத்தசோதி

யாதொன்றுண்டு ப்ராபாதிக ஸூர்யனுடைய சோதி, அதனோடு கலசிச் செவ்வியவாகி விளங்குகின்ற ஶோணகமலங்களாலே நிபிட மாயிருக்கும் ஸைந்தூர்ய; ரஜோம்ஶஸம்ஹதியும் இப்படியேயிராநின்றதாய்த்து;—பந்தூகபுஷ்பத்தின் சோதிபோன்ற சோதியையுடைய ஸூர்யகிரணங்கள் மற்ற ஸகல தேஜஸ்ஸுகளையும் திரஸ்கரித்துத் தாமே வீறுபெற்று எங்கும் பரவுகின்றமையால் காளமேகங்களும் தம் நிறம் கெட்டு இந்தச் செந்நிறத்தையே கொண்டனவாகி விளங்குதல்பற்றி, 'ஸந்த்யாராக ஸந்த்யாப்ரவிபாடிதங்களான பயோதங்களாலே ஸஹாஸ்யத்தையாயிற்று' ரஜோஜ்ஞரஶ்மி ஸம்ஹதி. இத்தால், மேகங்களை சிவக்கடிக்கவல்ல சோதிப்பெருமை ஸூர்யகிரணங்களுக்கு உள்ளவாறு சொல்லிற்றாயிற்று. இப்படிப்பட்ட ஸூர்யஜ்யோதிஸ்ஸானது [ஸவதாம் ப்ரத்யஹோதா: ப்ரணாமத.] ஸைந்தூர்யயோடு ஸாந்த்ரம் சொன்னது போலவே காயத்திலும் ஸாந்த்ரம் திருவுள்ளம் பற்றுகிறார்; "ஏந ஸாவாவா ஸஷ்டாஸ்யம்......பக்ஷாவகோஷ்டு...பஸ்ஞ்ஞ ஊரிதாயி...தஜ கவரூர்த்த"என்று அது செய்யும் நித்யபாப நிபர்ஹணமாகிற காரியத்தையே இதுவும் செய்யக்கடவதென்கிருர். ஸந்த்யாகாநாம் ஹாயா—ஸந்த்யாகப்ராயடு, என்றுகும். "ஹாயாபாஹாரஷ்ய" இதி பாணிநிஸூத்ரம்........

ஸாந்த்ரம் பச்யாப்ரவ்யா ப்ரகடயதி நபஸ்தாம்ரகாஜாங் காநி, ஸம்ஶ்லிஷ்டம் யாந்தி காந்திம் த்விஷதி பதேபத ஶோணரத்நா ரஜ்ஞாம்ஷு! கஷ்டகஷ்டாதிப்ரரத்நம் ஹரதி த்விதிஷாவஸ்ஸை ஊரூஷ்ம ஸாஹஸ, ஜாஷ்வாவத்ருவிப ஸ்த: ப்ரஹரணபதிஜம் யாச ஸஸ்தி பேநாதா ॥ (எ)

பதார்த்தம்

பதாபதஸஶோ	யாதொரு ஸூதர்ஶந ஜ்வாலை
	கிளருங்காலத்தில்
நஸ்:	ஆகாஶமானது

धूमौघैर्व्योम सादृश्यं प्रकटयति	புகைத்திரளின் ஸமுதாயத்தோடு ஒற்றுமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றதோ,
तारकाजालकानि स्फौलिङ्गीं कान्तिं यान्ति	நக்ஷத்ரஸமூஹங்களானவை தீப்பொறிகளினது ஒளியை அடைகின்றனவோ,
मेरुः अङ्गारशङ्कां दिशति	மேருமலையானது கொள்ளிக்கட்டையென்கிற ஶங்கையைத் தருகின்றதோ,
अग्निः शान्तार्चिः ऐक्यं भजति	அக்நியானது ஒளிமழுங்கப்பெற்றதாய் (ஸுதர்ஶந ஜ்வாலையிற் காட்டில் வேறுபட்டு விளங்கமுடியாதபடி அத்தோடு) ஒற்றுமையை அடைந்துவிடுகிறதோ,
दिननिशावल्लभौ त्यक्तोद्भासौ ज्वालावर्ताविव स्तः	ஸூர்ய சந்திரர்கள் தேஜஸ்ஸை இழந்தவர்களாய் ஜ்வாலையின் வட்டம்போல இருக்கின்றனரோ,
तत् प्रहरणपतिजं धाम	அப்படிப்பட்ட திருவாழியாழ்வானிடத் துண்டான தேஜஸ்ஸானது
वः पुनीतात्	உங்களை ஶௌசியப்படுத்துக.

திருவாழியாழ்வானுடைய சோதி கிளரும்காலத்து மற்ற தேஜ:பதார்த்தங்களெல்லாம் ஒளிமழுங்கி கலுஷமாம் படியைப் பேசுகிறார் இதில். பலபல தேஜ:பதார்த்தங்கள் நிறைந்து விளங்குகின்ற ஆகாஶமண்டலமானது சக்ரஜ்வாலையின் முன்னே ஒளிகெட்டு 'இது புகைக்கூண்டு' என்னும்படியான நிலைமையை அடைகின்றது; நக்ஷத்ர ஸமூஹங்களெல்லாம் 'இவை க்ஷுத்ரமான நெருப்புப் பொறிகளாம்' என்னவேண்டும் நிலைமையை யடைகின்றன. மேருமலையானது 'இது அங்காரமோ' என்று ஶங்கிக்கும்படியாகின்றது. அக்நி

உஷ்ணமான காஷ்டத்துக்கும் சந்த்ரஸம்பந்தமான காஷ்டத்துக்கும் நக்ஷத்ரமான காஷ்டத்துக்கும் ஸம்ஹாரமென்று பெயருண்டு. இவற்றுள் ஏதேனுமொரு பொருளை இங்கே கொள்க. சந்த்ரனானது தனது ஒளியெல்லாம் மழுங்கப்பெற்று ஸூர்யமண்டலத்தில் ஸ்வஸ்வரூப வத்தை அடையுமத்தனை யொழியத் தானொரு தேஜஃபதார்த்தமாகத் தனித்து விளங்கப்பெறாது. இனி ஸூர்ய சந்த்ரர்களோ வென்னில்; தங்களுடைய தேஜஸ்ஸு போனவழி தெரியாமல் ஒளியிழந்து, சிறுவர்கள் மாவலியாடும்போது தீவட்டம் காணப்படுமே அதுபோலவாகாநின்றார்கள்.

இப்படியாலே ஸகல தேஜஃபதார்த்தங்களையும் உருவழித்து எங்கும் மேம்பட்டு விளங்காநின்ற ஸூர்யஜ்யோதிஸ்ஸானது உங்களை மகிழ்விக்கவேணுமென்றாராயிற்று.

[ஸ்ரக்தரா] ஸ்ரக்தராவ்ருத்தம் ஸ்ரக்தரா. சந்த்ரஸ்ய கரணத்தில் "வாராதிஜ்யோதிஷ:" என்ற வாக்யம் இதற்கு நிதர்சகம். வாரா, த்ருணா, வஸ்த்ரா, வாத்யா, ஜாத்யாதிவத்॥ "தாரகாஜாலகாநி" = நக்ஷத்ர ஸமூஹங்களென்று பொருள்கொண்டால் ஜாலஶப்தஸ்ய ஸமூஹவாசகத்வாத் என்று கொள்ளவேணும்; அன்றியே, "க்ஷாரகோஜாலகம் க்லீபே கலிகா கோரக: புமாந்" என்ற அமரகோசத்தின்படி பொருள் கொண்டால், 'புதிய அரும்புபோன்ற நக்ஷத்திரங்கள்' என்று கொள்ளலாம். ஸம்ஜ்ஞா நாதியம் — ஸௌஸாம்ஜ்ஞீ. ... ...(எ)

உத்யத்யத்ரேர்யத்விகசநவஜபாவல்லிகாபம ஸகாஸம், ஸத்ய:ஸந்த்யாஸ்ரு[illegible] ஸம்பதி கமலநிபாஸ்தோ ஸமஸ்தாவ்யா நிஷ்டப்தா யேந நிஷ்க்ஷேதா விஸ்தீர்ண ஸஹ ஸாஸ்ஷ்ட்ரதீ நேத்ரே, ஸம்ஸாரம் தே ஸ்வர்ண: ஹிதவிஹதயே ஸாதநோ ஸாஸ்மா வ: ॥ (அ)

விகசநவஜபாவல்லிகாபம } அப்போதலர்ந்த ஜபாபுஷ்பத்தோ
யத்ரே } டொத்த திருவாழியாழ்வான்

அபி வ்யோம்நி த்ருஷ்டே ஸதி	ஆகாசத்தில் காணப்பட்டவளவில்
ஸ்வர்பாநு:	ராஹுவானவன்
“ஏஷ: பாநு: ஸ்யாத்” இதி த்யாயந்	“இதோ தென்படுகின்ற இப்புருஷன் ஸூர்யனேயாவன்” என்று நினைத்தவனாய் [ஆசையினாலே]
வேகத:	வேகமாக
அஸ்ய ஸகாஶமாகத:—	இத்திருவாழியாழ்வானுடைய அருகே வந்தவனாய்

(அவ்வளவில்)

யேப்ய:	எந்த ஸுதர்சநகிரணங்களினாலே
நிஷ்டப்தஸ்ஸந்	மிகவும் தபிக்கப்பட்டவனாகி
நிவ்ருத்த:	திரும்பிப்போனவனாய்
அத்யாபி	இன்றளவும்
சண்டாம்ஶும்	ஸூர்யனை
விதுமிவ	சந்திரனைப்போல
ஸஹஸா ஸ்ப்ரஷ்டும்	சீக்கிரமாகத் தொடுவதற்கு
நேஶே	அஸமர்த்தனாயிராநின்றானோ,
தே	அப்படிப்பட்ட
பாஸ்வரா: பாநவ:	மிக விளங்குகின்ற ஸுதர்சநகிரணங்களானவை
வ:	உங்களுடைய
அஹிதவிஹதயே	சத்ருவிநாசத்தின் பொருட்டு
படவ:	ஸமர்த்தங்களாயிடுக.

உலகத்தில் சந்த்ரக்ரஹணம், ஸூர்யக்ரஹணம் என்ற இரண்டனுள் ராஹுவுக்குச் சந்திரன் பிடிபடுவது சீக்கிரமாகவும் ஸூர்யன் பிடிபடுவது விளம்பமாகவும் நிகழ்வது வழக்கம்; இதற்கு ஒரு ஹேதுவை உத்ப்ரேக்ஷிக்கிறமுகத்தாலே ஸுதர்சநஜ்யோதிஸ்ஸின் ப்ரதாபாதிசயத்தைப் பேசுகிறார். அப்போதலர்ந்த ஜபாபுஷ்பம்போல் செக்கச்செவேலென்றிராநின்ற திருவாழியாழ்வானை ஒருகால் ஆகாசத்திலே கண்ட ராஹுவானவன் ‘இதோ ஸூர்

யன் கிடைத்துவிட்டான்; இவனைப் பிடித்துக்கொள்வோம்' என்றெண்ணி ஸூர்யக்ராஹியாலே ஸுதர்ஶநாழ்வானருகே விரைந்தோடிவந்தானும்; உண்மையில் அந்த வ்யக்தி ஸூர்யனல்லாமல் திருவாழியாழ்வானயிருந்தபடியாலே அவருடைய கிரணங்களாலே நன்கு தபிக்கப்பட்டு மீண்டொழிந்தவனான அந்த ராஹுவானவன் அதற்குப் பிறகு மெய்யான ஸூர்யனிடத்தில் போவதற்கும் அஞ்சி 'இவன் ஸூர்யனேயாவன்' என்கிற நிஸ்ஸம்ஶயவிஷயமான நிஶ்சயத்தைப் பெற்றபின்பே இவனருகே போகலாமென்றெண்ணி, சந்திரனை எப்படி ஶீக்ரமாகப் பிடிக்கிறானோ அப்படி ஸூர்யனைப் பிடிக்கமாட்டாமல் விளம்பியாநின்றானென்று ஹேதூத்ப்ரேக்ஷையிருக்கிறபடி. எனவே, ராஹுவுக்கு ஸஹஜமான ஸூர்யத்வேஷம்போலன்றிக்கே ஸுதர்ஶநத்வேஷம் அவனுக்கு ஸாதாரணஸஹ்யமாயிற்றென்றதாய்த்து. இப்படி ஸூர்யனிற்காட்டிலும் அதிஶயிதத்வேஷதாவராய் விளங்காநின்ற திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை உங்களுடைய பகைவர்களைப் பாற்றவேணும்.

ப்ராஜ்ஞி — அயிப்ராஜ்ஞே இதி விஸர்கலோபஶ்சாந்தஸ:. ஜவா = செவ்வரத்தை. நிஶ்ஶேஷம் யதா ததா தஷ்ட: நிஷ்டஷ்ட:. (௮)

தைவம் ஹேமாத்ரிதுங்கம் ப்ருதுபுஜஶிகரம் பிப்ரதம் மத்யதேஶே, நாபீத்வீபாந்தராலாவதிநவதிம் ஶேஷஶீர்ஷாஸநஸ்தம் | தேஜ: பர்யாயஹேதி: ஸ்புடகரகிரணாத்யுஷ்ணவீசி: பரீத்ய, ப்ரேத்யோ வஸ்த்ரப்ரவாலாவலய இவ விலஸந்நஸ்து திவ்யாஸ்த்ரராஶி: || (௯)

ப்ருதுபுஜஶிகரம்	பருத்த புஜங்களாகிற சிகரங்களையுடையனாய்
ஹேமாத்ரிதுங்கம்	மேருமலைபோல் உயர்ந்தவனான
தைவம்	ஸுதர்ஶநபுருஷனை [ருப்பதும்
மத்யதேஶே பிப்ரதம்	நடுவிடத்தில் வைத்துக்கொண்டி
நாபீத்வீபாந்தராலம்	நாபியாகிற தீவினிலே அழகிதாயிருப்பதும்

சுரவிபிநவத்டு	அரங்களாகிற காடுகளையுடையதும்
பெரஷஶீஷநாஸநஸ்தாடு	திருவனந்தாழ்வானுடைய முடியாகிற ஆஸநத்தின்மீது இருப்பதும்
(சுதவனவ) வயநாயஸஂஹதிடு	பூமியின் வேறொரு வடிவு படைத்ததுமான [ஸஂஹதியோடொத்த]
நேதிம் வரீத்ய	நேமியைச்சுற்றி
விஜஸநு	விளங்கிக்கொண்டிருக்கிற,
திநகர கிரணாஉஷ்டி வஹிஃ ... அகூவாலாவல ஐவ ஹிதஃ	ஸூர்யகிரணங்கள் கண்டறியாத ப்ரதேஶத்தையுடைய[எல்லையுடைய] லோகாலோக பர்வதம் போன்ற
திவ்யாஸ்த்ரஶ்மிஃ	ஸ்ரீஸுதர்ஶநஜ்வாலையானது
வஃ	உங்களுக்கு
ஸ்ரீயெத்ய சுஸ்து	ப்ரீதியின்பொருட்டு ஆயிடுக.

திருவாழியாழ்வானுடைய நேமியைச் சுற்றி அவருடைய ஜ்வாலை விளங்கும்படியைப் பார்த்தால் பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் விளங்குவதுபோல் உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யிருக்கையாலே அங்ஙனே உத்ப்ரேக்ஷித்துப் பேசுகிறார் இதில். நேமியை ஸஂஹதியாக ரூபணம் பண்ணுவதற்கு இன்றியமையாத உபபத்திகள் வாக்யத்திலே சொல்லப்பட்டன. "திநகரகிரணாஉஷ்டி வஹிஃ" என்ற விஶேஷணத்தால் லோகாலோக பர்வதத்தோடு திவ்யாஸ்த்ரஶ்மிக்குள்ள ஸாத்ருஶ்யம் நிர்வஹிக்கப்படுகிறது.

ஸஂஹதி எங்ஙனேயிராநின்றதென்றால்; பெரிய சிகரத்தையுடைய மேருமலையைத் தன்னிடையே தரித்துக்கொண்டும், தீவு, காடு, முதலியவற்றை யுடைத்தாயும், திருவனந்தாழ்வானுடைய திருமுடியின்மீது உள்ளதுமாயிராநின்றது; ஸ்ரீஸுதர்ஶந நேமியும் அங்ஙனே யிராநின்றதோ வெனில்; ஆம்; நேமிமத்யத்தில் ஸுதர்ஶந புருஷன் எழுந்தருளியிருப்பதானது மேருமலை திகழ்வதொக்கும். அப்புருஷனுடைய பருத்த புஜங்களானவை அம்மேருமலையின் பரிவாரஸ்தாநீயமாம். நாபியென்கிற அவயவம் தீவுபோன்றுளது; அரங்களானவை காடுகள் போன்றுள்ளன; இனி ஶேஷ

ஶீதாம்ஶுமண்டலத்துக்கும் ஒக்கும்; ஸாம்பபஞ்ச யந்த்ரத்தில், அப்படிப் பட்ட ஸந்நிவேஶம் ஶாஸ்த்ரங்களிலும் ப்ரஸித்தமிறே. இப் படிகளாலே ஸூர்யனின் சுவாரஸ்யமாயிராநின்றதாய்த்து நேமி. ஸூர்யனையச்சுற்றி லோகாலோகமென்னும் பர்வதம் வி ளங்குவதும், அம்மலையில் * இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறி யாத ஒரு ஸ்தானமுள்ளதும் ப்ரஸித்தம். திவ்யாஸ்த்ரராஶிக்கு அம்மலையோடு ஸாம்யம் ஶப்தஶ்லேஷத்தாலே வரக்கடவதத்தனை. 'நிஜகராக்ரேண: [illegible] யஸ்ய:' என்கிற விக்ரஹம் உபயபக்ஷத்திலும் ஒக்குமாகிலும் பொருளில் வாசியுண்டு. லக்ஷ் [illegible] பக்ஷத்தில் [illegible] த்திற்கு ஸ்தலமென்று பொருள்; ஸூர் யகிரணங்களாலே பார்க்கப்படாததொரு இடத்தையுடையது அது. திவ்யாஸ்த்ரராஶியோவென்னில்; ஸூர்யகிரணங்களால் காணப்படாத எல்லையையுடையது; ஸூர்யகிரணங்களாலும் எல்லைகாணமுடியாத தென்றபடி. [illegible] மென்றால் [illegible] என்றதாமிறே.

இப்படிப்பட்ட ஸாம்பஜ்யோதிஸ்ஸானது உங்களுக்கு நித்யஸந்தோஷமாகக் கடவதென்றாராயிற்று. ... (௬)

முக்யம் லோகஸ்ய சக்ஷுர் த்விவிதமபி ததா கர்ம நிக்நந் நம்ர
த்ரிநேத்ரம், [illegible]
[illegible]
[illegible]
ஜ்யோதி: ஶ்ரீ [illegible] ॥ (௭)

லோகஸ்ய முக்யம் சக்ஷு: — உலகத்துக்கு முக்கியமான கண் போன்றதும்

த்விவிதம் கர்ம [illegible] — புண்யபாபரூபமான இருவகைக் கருமங்களையும் போக்கடிப்பதும்

நம்ரத்ரிநேத்ரம் — முக்கண்ணனை சிவபிரான் வணங்கப் பெற்றதும்

சதுர்ணாம் புருஷார்த்தாநாம் தாதா	நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்பதும்
ஶத்ரூணாம் பஞ்சதாம் நயம்ஶ்ச	பகைவர்கூட்டங்களை நாசமடைவிப்பதும்
ஷட்குணாட்ய:	(ஞானம் ஶக்தி முதலிய) ஆறு குணங்களை நிறையப்பெற்றதும்
ஸப்தார்சிஸ்தப்தாஷ்டாபத நவகிரண ஶ்ரேணிரஜ்யத்தஶாஶ:	தீயில் காய்ச்சப்பட்ட ஸுவர்ணத்தினதுபோன்ற புதிய கிரணவொழுங்கால் சிவக்கின்றபத்துத் திசைகளையுடையதுமான
ஶதாராவயவவிபவஜ்யோதி:	ஸ்ரீ ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது
வ:	உங்களுடைய
ஸஹஸ்ரம் சாம்ஹ:	பலபல துன்பங்களையெல்லாம்
வ்யபோஹ்யாத்	தொலைத்தருள்க.

இந்த ஶ்லோகத்தில் 'ஏகம், த்வி, த்ரி' என்று ஒன்று முதல் பத்துவரையிலுள்ள எண்களுக்கும் நூறு ஆயிரம் என்னும் எண்களுக்கும் வாசகமான பதங்களின் விந்யாஸமும் நோக்கத்தக்கது. இந்த ஶ்லோகத்தைக் கடாக்ஷித்தே ஸ்ரீவேதாந்த தேசிகனும் கருட பஞ்சாஶத்தில் (5) 'ஏகோ விஷ்ணோர்த்விதீயஸ் த்ரிவ்ருதார விஹிதம் பஞ்சவர்ணீரஹஸ்யம் ஷாட்குண்ய ஸ்தோம ஸப்தஸ்வரமதிரணீரஷ்ட ஸந்தநவாத்மா । தேவோ தீர்க்கஶாகீ த்ருஶஶதநயநாரதி ஸாஹஸ்ரபக்ஷ: விக்ரீடத்பக்ஷகோடி விபுவடயத ஸஹ வீதஸம்வேதயோந:॥" என்ற ஶ்லோகத்தை யருளிச்செய்தார். இவர் ஆயிரத்தோடு நிறுத்தினார்; அவர் அதற்குமேலும் பேசினார் என்று வாசி காண்க.

இதில் "ஶத்ரூணாம் பஞ்சதாம் நயம்ஶ்ச" என்றவிடத்தில் ஐந்து என்ற எண்ணுக்கும் "நவகிரணஶ்ரேணி......" என்றவிடத்தில் ஒன்பது என்ற எண்ணுக்கும் பொருள்வகையில் தோற்றமில்லையாகிலும் ஶப்தஶக்தியிலே ஶப்த: ஸம்வ்யாப்தி உண்டாகுமென்கிறவத்தனையே விவக்ஷிதம்; திருவெழுகூற்றிருக்கையிலும் இப்படியே யிறே காண்கிறது.

[த்³விவித⁴ம் கர்ம ஸந்தா³ஹக] புண்யபாபரூபமான இருவகைக்கருமங்களையும் தொலைப்பது என்கை; பாபத்தைத்தான் தொலைக்கவேணும், புண்யத்தையும் தொலைக்கவேணுமோ வென்னில்; ஆம்; பாபம் நரகாவஹம்; புண்யம் ஸ்வர்க்காதி³ க்ஷுத்³ரப²லப்ரத³ம். ஒன்று இரும்புவிலங்கு; ஒன்று பொன்விலங்கு. "ததா³ வித்³வாந் புண்யபாபே விதூ⁴ய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்னுமதி⁴காரிக்கு இருவினைகளும் தொலையவேணும்: "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து" என்றார் ஆழ்வாரும்.

[ஶதாங்கா³வயவவரிஷ்ட²ஜ்யோதி:] "ஶதாங்க³ஸ்ஸ்யந்த³நோ ரத²:" என்ற அமரகோஶத்தின்படி ஶதாங்க³ஶப்³த³ம் ரத²வாசகம்; அதனுடைய அவயவங்களில் [வரிஷ்ட²ம்] சிறந்தது—சக்கரம். [ஈதிஸஹஸ்ரே]. "அதிவ்ருஷ்டிரநாவ்ருஷ்டிஶ்ஶலபா⁴ மூஷகாஶ்ஶுகா: । அத்யாஸந்நாஶ்ச ராஜாந: ஷடே³தா ஈதயஸ்ஸ்ம்ருதா:" என்று ஈதிகள் விஶேஷித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் இங்கே ஸர்வாநர்த்த²மும் விவக்ஷிதமென்க... ... ... (௧௦)

உத்³த³ண்ட³ யத்³த⁴வண்ட³ நிவிஶதி நப⁴ஃப்ராங்க³ணம் ஜாதகோடி
த்³ருஷ்டி, ஸஹ்யஸ்ய ஶ்ருங்க³தாவஹ்னிதவஸாரோ லிஹ்ருதீ
ப்ரஸஹ்யவத்³த்⁴வஸ்த: யதே³த³ ஸாம்யோஷ்ணாயோதா⁴ விபா⁴ஸமாஸேந:
க்ஷோணீத்³ரோணீஸஸ்ய ஸாந்த்³ரே, ப்ரக்ஷீணவஸ்துஜோஷோ ப்ரமீத
ஸாசவிதவ்யாஷ்டியா வ்ருஷ்டியா வ: ॥ (௧௧)

உத்³த³ண்ட³ — (பகைவர் திறத்தில்) மிகவும் தீக்ஷ்ணமான
யத்³த⁴வண்ட³ — யாவை சில ஸுதர்ஶந கிரணங்களின் ஸம்பந்தமானது
நப⁴ஃப்ராங்க³ணம் — ஆகாஶமுற்றத்தை
நிவிஶதிஸதி — நெருக்கா நின்றவளவில்
அர்க்க: — ஸூர்யனானவன்

ஜ்வாலாதாபஜ்வலிதவிவஸ்வாந் — மிக்க தாபத்தினால் வாட்டப்பட்ட வடிவையுடையவனாய்க்கொண்டு
அம்போப்ருத்ஸு — ஜலத்தை ஏந்திக்கொண்டிருக்கிற மேகமண்டலங்களில்
காஹ்யம்காஹ்யம் — அடிக்கடி அவகாஹித்து
த்யாம் அடதி — ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறானே,
விது: — சந்திரனானவன்
ஶுஷ்யத்ஸுதோத்ஸ: — உலர்ந்துபோன அம்ருத ப்ரவாஹத்தையுடையனாய்
அபேத: க்ஷௌத்ரகோஶஸ்ய — தேனற்ற தேனடையினுடைய
ஸாம்யமேதி — ஒப்பை அடைகின்றானே,
சக்ரஸ்யாஹோ: — திருவாழியாழ்வானுடைய
தே — அப்படிப்பட்டவையாய்
ப்ராணஸம்ருத்தவ்ருஷ்டய: — பாணஸம்ருத்தியைப் பண்ணவல்லவைகளான
வ்ருஷ்டய: — கிரணங்களானவை
வ: ரக்ஷந்து — உங்களைக்காத்தருள்க.

வளரொளிய கனலாழியின் ஜ்வாலாஸமூஹமானது ஆகாசத்தை அளாவி எங்கும் பரந்தவளவில் அதனுடையதாபம்பட்டு மிகவும் வாட்டமடைந்த ஸூர்யன் தாபசாந்திக்காக நீர்கொண்ட மேகமண்டலங்களில் அடிக்கடி அவகாஹித்து அதனால் தாபம் தணியப்பெற்றுத் தனது தொழிலைச் செய்ய வல்லவனாகிறான். ஸூர்யனுடைய கதி இதுவாயிற்று: சந்திரனோ வென்னில், [ஜ்வாலாதாபஜ்வலித: என்ற விசேஷணம் சந்திரனுக்கும் அந்வயிக்கக்கடவது.] தனது அம்ருதரஸமெல்லாம் சோஷமாகப் பெற்றவனாய்த் தேன் அற்ற தேனடைபோலும் நிலைமையை எய்துகின்றான். ஜ்வலிததேஜஸ்ஸர்களான ஸூர்யசந்த்ரர்களை இப்பாடுபடுத்தவல்ல பெருமைவாய்ந்த ஸுதர்சந கிரணங்கள் உங்களைக் காத்தருளவேணு மென்றதாயிற்று. [உத்ஸ:—ப்ரவாஹம். வ்ருஷ்டி:—ஸம்ருத்தி,] (௧௧)

பத்மௌகோ தீர்க்கிகாஸு ஶைலநிதம்பதடே கைரிகாம்பு
ப்ரபாத:, ஸிந்தூரம் திக்கஜாநாம் திஶிதிஶி ககநே ஸாந்த்ய
மேகப்ரபந்த: । பாராவாரே ப்ரவாளோ வநபூமிஷு ததா
ப்ரேக்ஷ்யமாண: பௌரைர்மூடை:, ஸாதிஷ்டம் வ: *ப்ரபோதம் ஜநய
து ரதாங்கஜ்யோதிஷ: த்விஷாம் ராஶி: ॥ (௧௨)

தீர்க்கிகாஸு	வாவிகளின் தண்ணீரில்
பத்மௌக:	செந்தாமரை மலர்களின் திரளாக[வும்]
ஶைலநிதம்பதடே	மலைச்சாரலில்
கைரிகாம்புப்ரபாத:	யாதுஜலங்களின் அருவி வீழ்ச்[சியாகவும்]
திஶிதிஶி	திசைகள்தோறும்
திக்கஜாநாம்	திக்கஜங்களினுடைய
ஸிந்தூரம்	சிந்தூரப்பொடியாகவும்
ககநே	ஆகாயத்தில்
ஸாந்த்யமேகப்ரபந்த:	அந்திப்போதை மேகத்திரளாக[வும்]
பாராவாரே	கடலில்
ப்ரவாள:	பவழமாகவும்
வநபூமிஷு	காட்டிடத்தில்
ததா (ப்ரவாள:)	பல்லவமாகவும்
மூடைர் ப்ரேக்ஷ்யமாண:	மூடர்களாலே பார்க்கப்படாநின்ற
ரதாங்கஜ்யோதிஷ: த்விஷாம் ராஶி:	திருவாழியாழ்வானது கிரணஸமூஹமானது
வ:	உங்களுக்கு

ஸாதிஷ்டம் ப்ரபோதம் ஜநயது நல்ல அறிவைஉண்டாக்குக.

திருவாழியாழ்வானுடைய ஜ்யோதிஸ்ஸமூஹம் ஸர்வதேச வ்யாபியென்னுமிடத்தை ஒரு உக்தாரமாகப் பேசுகிறார் இதில். வாவித்தடம், மலைச்சாரல், ஆகாயம், கடல், காடு முதலான எல்லா விடங்களிலும் திருவாழியாழ்வானுடைய சுடர்ச்சோதிவெள்ளமே வியாபித்துக்கிடக்கின்றது; ஆனால் உண்மைகண்டறியகில்லாத மூட ஜநங்கள் "இவையெல்லாம்ஸாதாரணஜ்யோதிர்வஸ்துக்களேயாம்"

என்று அறுதியிடமாட்டாமல் ஒரோவிடங்களில் ஒரோவஸ்துவாக மயங்குகின்றன: அந்த உக்ரப்ரதாபத்தை வாவித்தடங்களில் தாமரைமலர்களாகவும், மலைச்சாரல்களில் காவிநீர்ப் பெருக்காகவும், த்விரதங்களிடத்தில் சிந்துரச் செம்பொடியாகவும், ஆகாயத்தில் ஸந்த்யாராகமாகவும், கடலினுள் பவழமாகவும், காட்டிடத்தில் செந்தளிராகவும் ஜந்துக்கள் காணுகின்றனவித்தனை. (உண்மையறியவல்ல யதார்த்ததர்சிகள் இங்ஙனே ப்ரமிக்கமாட்டார்கள்; பத்மம், கைரிகாதுஜாதம், ஸிந்தூரம், ப்ரவாளம். முதலானவற்றை ஸாக்ஷாத் ப்ரகாரமாகவே காண்பார்கள்—என்பது உள்ளுறை) இஃது அதிசயோக்தி.

த்ருதீயபாதத்தில் 'ததா' என்பதனால் 'ப்ரவாள:' என்றதை அநுஷங்கித்துப் பொருள்மாத்திரம் வேறாகக் கொள்ளத் தக்கது. "ப்ரவாளோஸ்த்ரீ கிஸலயே வீணாதண்டே வித்ருமே" என்ற நிகண்டுவின்படி ப்ரவாளசப்தத்துக்குத் தளிரென்றும் பவழமென்றும் பொருளுண்டாதல் உணரத்தக்கது.

"ஸாயிஷாவ: ப்ரமோதம்" என்றும்.....ப்ரபோதம் என்றும் பாடபேதமுண்டு. ப்ரமோத:—ஸந்தோஷம். ப்ரபோத:—சிறந்த ஞானம். [சடஜித்துஷ்டிண:] சடஜித் என்று எம்பெருமானுக்குத் திருநாமமிருப்பதுபோலவே திருவாய்மொழியாழ்வானுக்குமுண்டு. கவிஷாம் ஸ்வதந்த்ரே; ஸ வாஸவ ராசி ப்ரதி விக்ரஹ:. அதவா—கவிஷாம் ஸம்ஹ: ச்ரேஷ்ட; தஸ்யராசி: என்பாருமுண்டு: ஸமூஹத்தினுடைய ஸமூஹம் என்பதனால் பாஹுள்யாதிசயமே தோற்றும். ... ... (கஉ)

ஸாரேநா! ஸா ரேநா ததீயா ஸம்பதி காரிகீர்த்தி! தே காந்த தேஜ:, தாரா:! ஸாரஸாரா[illegible] நம! ந ஸவத: [illegible] ஸம்ஸந்த்ம் நஸ்ஸ யத்தயஸ்மே வக்ராராஜாம்பவஸ்ய, யாஷாகம் ப்ரளயதாவப்ரஸவஸமதா வக்ரராய க்ருஷ்ணாயா (கங)

4

யதுதயஸமயே	எந்த ஸூர்யகிரணங்களின் உதயகாலத்தில்
நபஸ்யா:	ஆகாசத்திலுள்ள தேவப்ரப்ருதிகள்
'ஹே ஸவித: ! க்ஷீணா ஸா: தேஜஸா ந பாதி'	'ஓ ஸூர்யனே! உனது தேஜஸ்ஸானது (ஸூர்யகிரண தேஜஸ்ஸின் முன்னே) விளங்கவில்லை (என்று ஸூர்யனை நோக்கியும்)
'ஹே சந்த்ர! தே தேஜ: க்வ?'	'சந்திரனே! உனது தேஜஸ்ஸு எங்கே?' (என்று சந்திரனைநோக்கியும்)
'ஹே தாரா: தூராஸ்த்'	'நக்ஷத்திரங்களே! தூரத்தில் நில்லுங்கள்' (என்று நக்ஷத்திரங்களை நோக்கியும்)
'அக்நே! க்ஷீணோஸி'	'அக்நிபகவானே! சப்பையாய்விட்டாயே!' (என்று அக்நியை நோக்கியும்)
'ஹே வஜ்ராக்நே!	'ஓ வஜ்ராக்நியினது தேஜஸ்ஸே!
ஸ்வத:	உனக்கு
ஸ்வாதந்த்ர்யம் ந	தனித்து விளங்கக்கூடிய ஸ்வாதந்திரியமில்லை (என்று வஜ்ராக்நி தேஜஸ்ஸை நோக்கியும்)
இத்யம் ப்ரவந்தி	இவ்வாறாகச் சொல்லுகின்றனரோ,
தே	அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த
அம்ஸுமத:	திருவாழியாழ்வானுடைய கிரணங்கள்
யுஷ்மாகம்	உங்களுடைய
பூர்வம் தாவத் ப்ரபவ பவ ரோக ஸ்ரோதஸே	பூர்வமான தாபத்ரயாதிகட்கு உத்பத்திஸ்தானமாகியஸம்ஸாரமாகிற நோய் தீர்வதன்பொருட்டு
க்ரமந்தாம்	பராக்ரமிக்கட்டும்.

கீழ் ஏழாவது ஶ்லோகத்தில் ப்ரதிபாதித்த அர்த்தத்தையே ப்ரகாராந்தரத்தாலே இதிலும் அருளிச் செய்கிறார்.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் கிளரும்போது, ஆகாசத்தில் திவ்யவிமாநசாரிகளான தேவகந்தர்வாதிகள், ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜஸ்வீபதார்த்தங்களை நோக்கி இங்ஙனே சொல்லுகிறார்களாம்:—அப்பா ஸூர்யனே! உனது ஒளி விளங்கமாட்டாமல் மங்கிப்போயிற்றுக்காண்; அப்பா சந்திரனே! உன் தேஜஸ்ஸு எங்கே புக்கொளித்தது? நக்ஷத்திர கணங்களே! இனி நீங்கள் கடக்க நிற்கவேண்டுமத்தனை; ஓ ஹவ்யவாஹனே! உன்னை நாங்கள் பெருமதிப்பனாக நினைத்திருந்தோமே; ஒளியற்றவனாய் சப்பையாய்விட்டாயே!; ஓ வஜ்ராக்நிதேஜஸ்ஸே! நீ ஸௌதாமநீஜ்யோதிஸ்ஸில் லயித்து உருவழிந்துபோகும் பரதந்த்ரனாய் விட்டாயேயன்றி ஸ்வதந்த்ர தேஜோவஸ்து அல்லைகாண்; என்று நின்றார்கள் வஸ்துத: இப்படி சொல்லுகிறார்களோ வென்னில்; சொல்லாவிடினும் இங்ஙனே சொல்லவேண்டும்படியான நிலைமை விளைகின்றதென்கையிலே தாத்பர்யம். அப்படிப்பட்ட ஸுதர்சந கிரணங்கள் உங்களுடைய ஸகல து:க்ககாரணமான ஸம்ஸாரரோகத்தைத் தொலைக்கக்கடவன வென்றதாயிற்று. இரண்டாம் பாதத்தில் "தாரா: ஸ்தாரகா" என்றும் பாடம் வழங்கும். அப்போது, (கவி, ஸ்ரு:,) ஸ்ரு. என்று ஷண்ணயஸாஹஸ்ரவசநமாம். அதிற்காட்டிலும் ஜோணயஸாஹஸ்ரவசநமே பொருட்சேர்த்திக்கும் அக்ஷராநுப்ராஸஸ்ரீக்கும் ஒக்கும். பெரியோர் ஓதும் பாடமும் இதுவே. பதயோ—ஸ்தாக, ஸ்தௌ, ஸ்த. என்று ரூபம்.

ஜ்வாலா கல்பேஷு தைத்யாங்கநாஸ்ரீவிஸ்ரம்பகேஷு
ஸ்வஸ்தாநே ஸ்வாஸ்ரீவத்ஸாத் ஸ்வஸ்தகர்மாதிபோதா
நாத்மிகேஷு ஸாதோ வஸ்துக்ஷதாநாம் வஸ்த்ரவிஸ்ரம் ப்ரத்யக்
நாம் உத்ஸாஹம், ஸ்ரீ ஸ்வாஹாகாரத்ருஷ்டாந்தகஸ்ஸ:
ஸாந்த்வநாம் ஸ்தாநாம் ॥ (௧௪)

கரிவைஷம்யாணாம் — ஸத்ருஸ்த்ரீகளுடைய [அஸுர ராக்ஷஸமாதர்களுடைய]

கர்ணேஷு	காதுகளில் (மங்களாலங்காரமாக அணியப்பட்டிருந்த)
தூர்வாங்குராந்	அறுகம்புற்கதிரை
ஜக்த்வா	தின்றுவிட்டும்
ஸுரமாத்ருணாம்	தேவமாதர்களுடைய
சக்ஷுஷோ	கண்களில் (பெருகிக்கொண்டிருந்த
அம்பூம்ஷி	நீரை
பீத்வா	குடித்துவிட்டும்
ஸர்வத்ர யதா ததா சரந்த்ய:	தருமநெறி வழுவாமல் திரிகின்றவையாயும், (பசுக்களின் பக்ஷத்தில்) 2. காளைகளோடுகூடத்திரிகின்றவையாயும்
க்ருஷ்ணேந வஶ்யேந	க்ருஷ்ணனை எம்பெருமானாலே
அநுகதா:	பின்செல்லப்பெற்றவையாயும்
ப்ரபந்நாநாம்	அடுத்தவர்களுக்கு
ஸாரம் க்ஷீரரஸம்	சிறந்த க்ஷீரரஸத்தை (2) சிறந்த மோக்ஷருசியை
துஹாநா:	கறந்து கொடுப்பவையாயும் (2) உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கிற
ஸலோகத்ரயதீபஸ்ய கடாக்ஷதீர்த்தஸ்ய நாதஸ்ய	ஸஹஜமாகத்தாலே மூவுலகவிருளையும் விலக்கின திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை, (2) தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே மூவுலகத்தவரின் அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கியருளும் கண்ணபிரானுடைய பசுக்களானவை
வ:	உங்களுக்கு
ஸாதத்யபாஜாம் ஸ்ரியம்	தொடர்ச்சி அறாமல் ஶாஶ்வதமாயிருக்கக்கூடிய செல்வத்தை
ததது	தந்திடுக.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் உங்கட்குத் தொடர்ச்சியறாத செல்வத்தைத் தந்திடுகவென்கிறார். "...ளா: ஸுதர்ஸநஸ்ய வஹ்நிரேகா ஜ்வலந்தி ... ப்ரோவாஸோ? வஸ் ஸௌதர்ஸநீஸ் ஸ்ரீ ப்ராண நிர்வாணஹேதவ ஸந்த்விஹ." என்ற ஸ்ரீஸுதர்ஸநஸதகத்தின்படி கோஸப்தத்திற்கு உள்ள பலபொருள்களில் பசு என்ற பொருளையும் கிரணம் என்னும் பொருளையும் ஏககாலத்தில் இங்கே விவக்ஷித்து 'கோவ:' என்றருளிச் செய்கிறார். 'வஸுஸந்தாந' என்னும் பதம் வஸும் ஸந்தநோதி என்ற வ்யுத்பத்தியால் கண்ணபிரானையும், 'வஸும்ஸாதேஸௌஸந்தாநஸ்' என்னும் வ்யுத்பத்தியால் திருவாழியாழ்வானையும் சொல்லும். (வஸுர்ராஜ:, வஸுர்ஹேமாத:ஜ்யோதிஷஸ,) ஆகவே, "வஸுஸந்தாநோக்ஷாவ:" என்ற ஸ்லோகத்தில், திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் என்ற பொருளும் கண்ணபிரானுடைய பசுக்கள் என்ற பொருளும் ஆகும்படியருளிச் செய்கிறார் ஸ்லேஷவைசித்ர்யவத்தாலே. இரண்டிற்கும் பொருந்த விசேஷணங்களிடுகிற வைசிஷ்யத்தைப்பாரீர். [கரிஸந்துஷ்டராம் கண்டேஷு தூர்வாக்ராஸம் ஜக்த்வா, ஸ்வச்சந்தம் சக்ஷுஷு சாஸ்ரு: பீத்வா ச வாரஸ்த்ய:] பசுக்கள் புற்களைத்தின்று தண்ணீரைக் குடித்துத் திரியும்; ஸுதர்ஸநகிரணங்களும் அப்படியே செய்கின்றன;—அஸுர ராக்ஷஸமாதர்கள் தங்கள் காதுகளில் ஸௌபாக்யஸூசகமாக அணிந்துகொண்டிருந்த அறுகம்புல்லைத் தின்றுவிட்டுத் தேவமாதர்களுடைய கண்களிற் பெருகிக்கொண்டிருந்த சோகாஸ்ருப்ரவாஹத்தைப் பருகிவிட்டு ஸவிலாஸமாகத் திரிகின்றனவாம். இதனால் பெறப்பட்டதென்னென்னில்; அஸுர ராக்ஷஸஸ்த்ரீகள் விதவைகளாம்படி அவர்களது பர்த்தாக்களையொழித்து, அவர்களால் நலிவுபட்டிருந்த தேவஜாதியின் து:க்கத்தைத் தீர்த்தவை ஸுதர்ஸநகிரணங்கள் என்றதாகிறது. கழுத்தில் மங்கலஸூத்ரதாரணம் போலே காதில் தூர்வாங்குரவிந்யாஸமும் ஸுமங்கலிகளுக்கே உரித்தாகிறது; அது போயிற்றென்றால் வைதவ்யம் வந்ததாருமத்தனை. ஸத்ருக்கள் செத்தபின்பு தேவ

மாதர் அழுவதற்கு ப்ரஸக்தியில்லாமையால் அவர்களுடைய கண்ணீர் ஸஹஸ்ரகிரணங்களால் பருகப்பட்டதாக உத்ப்ரேக்ஷிக்கப்பட்டது.

“ஸவ்ருஷம்” என்பது ‘வாரணம்’ என்ற வாரணக்ரியையிலே விசேஷணமாக அந்வயிக்கக் கடவது. [ஸவ்ருஷம் வாரணம்] வ்ருஷசப்தத்திற்கு வ்ருஷபமென்றும் தர்மமென்றும் இரண்டுபொருள். பசுக்கள் வ்ருஷபத்தோடே கூடித்திரியும், ஸஹஸ்ரகிரணங்களானவை தர்மத்தோடே ஸஞ்சரியாநின்றன. அதாவது—பாவிகளை நிரஸித்தலும் தார்மிகர்களைப் பாதுகாத்தலுமாம். அதர்மமறியாத எம்பெருமான்படியே இருக்குமாய்த்து ந்யாயமும். [க்ஷிதௌ தேநவஸ்ய ச ஜநார்தந:] க்ஷிதிபாலனான எம்பெருமான் பின்செல்லப்பெற்றிருக்கை பசுக்களுக்கும் ஸஹஸ்ரகிரணங்களுக்கும் ஒக்கும். இவைபுகுமிடமெங்கும் எம்பெருமானும் புக்கு நிற்கிறானிறே ஸர்வதேசவ்யாபித்வாத் அவிசேஷாத்॥

[ப்ரஸ்ருதாநாம் வர்ஷோத்தமம் ஹாஸாநாம்:] “கோரதம் பசௌ க்ஷீரே ஸ்வர்கே விஷயே வஜ்ரே ச ப்ரதேசே த்ருஸௌ ரச்மௌ கோக்ஷு” என்ற நிகண்டுகோசத்தின்படி கோசப்தத்துக்குள்ள பல பொருள்களில், பால், மோக்ஷம் என்ற இரண்டு பொருள்கள் இங்கே விவக்ஷிதம். பசுக்கள் தம்மை எய்தினர்க்குப் பாலைத் தரும். இவை முக்தியைத்தரும். “ஸ்வர்லோகஸுகதுக்க த்ரிஸம்ஸார தாபஸ:” என்பதை ப்ரயோஜநஸம்பந்தமாகக் கொண்டு (ஜநா:) என்பதற்கு விசேஷணமாக அந்வயிப்பர் சிலர். ஷஷ்ட்யந்தமாகக்கொண்டு வஸந்தர்க்கு விசேஷணமாக அந்வயிப்பது சிறக்கும். [ஸ்வர்லோகஸுகதுக்க த்ரிஸம்ஸார தாபஸ: வஸந்தர்:] கோசப்தமென்று ப்ரகாசத்துக்கும் பார்வைக்கும் பெயர். எம்பெருமான் தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே த்ரிஸம்ஸார தாபங்களையும் போக்கியருள்பவன்; திருவாழியாழ்வான் ஸ்வப்ரகாசத்தாலே அங்ஙன் செய்பவன். முதல்பக்ஷத்தில் தர்சனஸ்பர்சனம் ஜ்ஞாநம்.

[ஸாந்த்வயந்தம் ச்லிஷ்டம் ததாது] ஸௌஹ்ருத்யமும் தொடர்ச்சி போதே கூடியிருக்கையாவது விச்லேஷமற்றிருக்கை; ஶாச்வதமான என்றபடி. செல்வத்தை மேன்மேலும் பெருகச் செய்கவென்கை. [ததாது] இந்த க்ரியாபதம் ''தாதாரோ நோ'' என்ற யாஜ்யாவில் நிஷ்பந்நமென்று ஸூசிக்கும் சிலர், 'தத்தாம், ததாதாம், ததாதாம்' என்றுகொண்டு ''ததாது'' என்றன்றோ ப்ரயோகிக்க வேணும்; ததாதுமென்னவொண்ணாதேயென்று தோஷம் பண்ணுவர்கள். அங்ஙனன்று; ஸ்ம்ருதியில் ''தத—தாரோ'' என்றொரு யாதாவுண்டு; அதில் லோட்ப்ரதமபுருஷ பஹுவசநாந்த ரூபமாய்த்து இது. தததாம், ததேதாம், ததாது—இதி | ''ஸாஹித்யம் ஶ்ரீ ஶ்ரீதரோ ராஸ்து 'ததது' லோகம் வராதீ ஶ்ரீ!'' என்றார் ஆழ்வானும் ஸுந்தரபாஹுஸ்தவத்திலே.

இவ்வுலகத்தில் கண்ணபிரானுடைய பசுக்களின் பரமாக ஒரு பொருள் தோன்ற ஶப்தவிந்யாஸம் பண்ணினவிதற்குக் கவியின் ப்ரதிபத்தாரதிசய ப்ரதிபாதநோத்யோஜித தாத்பர்யாதிசயமேயாய்த்துப் பரமப்ரயோஜநம். இங்கே த்வநியா? உபமாலங்காரமா? ச்லேஷமா? எங்ஙனே நிர்வஹிப்பதென்னில்; சிலர் சொல்லக்கூடும்—உபமாஸாத்ருச்யமான ஶப்தங்கள் இல்லாமையாலே உபமாலங்காரம் சொல்ல இடமில்லை; ராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் ''ரம்யா இதி ப்ராப்தவத்யஸ்தாகா: ராமம் விதித்வா இதி பர்யாயஞ்ச: யஸ்யாஸ்ஸைவஞ்ச ரக்ஷணீகா: ஸம்பந்நசக்ரீ பர்யஷீயர்வாத:॥'' என்ற ச்லோகத்தில் போலே ஶப்தஶ்லேஷம் சொல்வதற்கும் இடமில்லை. ''ஸதாவிரதிகாமாய: ஸ்ரீமதஶ்ச ஸ்வபக்ஷாஹம் பவநஹர்ஷாஜவேந நீதா:। ஸாந்த்ரகேயூர ஹித ராமலக்ஷ்மணாநாம் ஸாயகாஸ்ச ஜயந்திராம் தஹாஸர ஸத்ய:॥'' என்ற ரேவதகவர்ணந ச்லோகத்திற்போல ஶுத்த ச்லேஷம் சொல்வதற்குமில்லை; ஸமம், ஸாயகாஸ்ச ஶப்தாதிப்ர ஶப்தங்கள் இல்லாமையாலே. ஆனபின்பு த்வநியாகக்கடவதென்பர்; அங்ஙனல்ல; ''கூயசதிஜநராஶ்வ்ருகா ம்ருஹீபரஞ்ஸாவிதீவ

யோயமேவமநூஷ்டாதா ஸக்ததேஸாநந்தா தீர்க்ஷமேவ ... ணதத்கரிகாஸ்ப்ருஷ்டி ...'' என்று தேவதைகளுக்குள் ... கத்திற்போல ச்ரேஷ்டாநுகூலமான ஸங்கல்பஸாதகமாக கடவது. ஸர்வ யாவதி ஸத்ய ஸங்கல்பமான ஒரு ...த்தைத் தோற்றுவித்தல் ஸா மார்த்தியம் ... என்ற ... ஸாரம் இங்கே அநுஸந்தேயம். ... ... (௧௪)

ஸேநாம் ஸேநாம் தேவாநாம் ஆஹதி ரணாங்கணே ... ஸமூஹம் ... ணீம், உத்த கோஷா ... தோஷா ... வீரா ... யா ... கவளீகரோதி। விச்வம் விச்வம்பராத்யம் ரதாங்கபதேர் ... லீலயா பாலயந்தீ, ஸ்ருஷ்டிஸா தீப்தீநாம் ஸ்ருஷ்டிர் ... பாது ... ஸ்தாந் ... வ: ‖ (௧௫)

ஆஹதி ரணாங்கணே	பெரிய போர்க்களத்தில்,
ஸேநாந்யா	தலைவர்களோடு கூடினதான
தேவாநாம் ஸேநாம்	இந்திரனது சேனையை
